1994 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்;

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

4. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

(ஆ) பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ்,

மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates),

பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts),

பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings) மற்றும்

உரிமைக் குழு (Committee on Privileges)

ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 22-ஆம் நாள் வெள்ளிக்கிழமை, பிற்பகல் 3.00-க்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.